24th August 1961]

Poramboke lands for panchayats

*1392 *Q.*—Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எந்த வகுப்புப் புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது ?

(இ) உபயோகமுள்ள புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்தினிடம் ஒப்ப டைக்காததன் காரணமென்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ) The following classes of porambokes have been vested in panchayats under the provisions of the Madras Panchayats Act, 1958 :—

1. Grazing grounds.
2. Threshing floors.
3. Burning and burial grounds.
4. Cattle-stands.
5. Cart-stands.
6. Topes.
7. Unreserved forest porambokes.

(இ) In addition to these classes of porambokes, Government have also ordered that Collectors should authorise the panchayats to regulate the use of other classes of porambokes, if the panchayat applies for such powers. The Government have also issued orders to the effect that the panchayats will have the right to utilise assessed waste lands and unoccupied portion of natham porambokes for any public purpose relating to panchayat administration without obtaining any prior permission from anybody.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : பஞ்சாயத்துகளுக்கு புறம்போக்கு நிலங்களை ஒதுக்குகிறபோது, தளம், மயானம் என்பவைகளை மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பஞ்சாயத்துக்கள் அங்கு வேலை செய்வதற்கு பஞ்சாயத்தின் அபிவிருத்திற்கு அங்குள்ள புறம்போக்கு, நத்தம், சமுதாயம் என்ற நிலங்களை எடுத்துக் கொள்ள எந்தவிதமான உரிமையும் அளிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. குளம் போன்றவைகளின் மகசூல் மூலம் வருமானத்தை அதிகப்படுத்துவதும் இதரப் புறம்போக்குகளின் வருமானத்தை அதிகப்படுத்தி பஞ்சாயத்து வருமானத்தை விஸ்தரிப்பதற்கு எல்லா நிலங்களும் பஞ்சாயத்துகளுக்கு கிடைக்கவில்லை. ஆகவே கிராமப் பஞ்சாயத்து ஏரியாக்களில் உள்ள குளம், நத்தம், புறம்போக்கு இவைகளை எல்லாம் பஞ்சாயத்தினிடமே ஒப்படைத்து அதன் மூலம் அபிவிருத்தி காண முயற்சிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சட்டத்தில் எந்தெந்த புறம்போக்குகளை எந்தெந்த நிலங்களை பஞ்சாயத்தினிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருக்கிறோம். அதற்கு மேல் பாக்கியுள்ளதில் அவர்கள் உபயோகத்திற்கு எந்தளவு கொடுக்கவேண்டுமென்பதை நிர்ணயித்து இப்பொழுது அதற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதில் முக்கியமாக கலெக்டர்கள் இதுபற்றி பரிசீலனை செய்து அந்தந்த பஞ்சாயத்துக்களின் நலனுக்கு தக்க பிரகாரம் பொது சொத்துக்களை பஞ்சாயத்தினிடம் ஒப்படைக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. எந்த சொத்தாவது அவர்கள் பராமரிப்பின்கீழ் வர வேண்டுமென்று சொன்னால் அதைப்பற்றி கலெக்டரிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவர் அதை பரிசீலனை செய்து பார்த்து முடிவு செய்வார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : பஞ்சாயத்துகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கக் கூடிய அந்த குறிப்பிட்ட புறம்போக்கு நிலங்கள் எந்த உபயோகத்திற்காக வேண்டி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு உபயோகமில்லாத ஒரு நிலையில் 10, 20, 30 வருடங்களாக விவசாயம் செய்து வரக்கூடிய நிலத்தை எல்லாம் ஏழை விவசாயிகள்பேரில் பட்டா செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது, பஞ்சாயத்து முடிவு செய்யவேண்டியது. பொது விஷயங்களுக்கு உபயோகப்படுத்துவதா அல்லது தனிப்பட்டவர்களுக்கு கொடுக்கிறதா என்று பஞ்சாயத்து பார்த்து முடிவு செய்யவேண்டும். இது எங்களுக்கு தேவையில்லை, அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கலாம் என்று சொன்னால் அதைப்பற்றி ஆலோசிக்க முடியும்.

SRI N. MARUDACHALAM : கோவில் இனாம் நிலங்கள் தனிப்பட்ட ஒரு பஞ்சாயத்தில் இருக்கிறது. அந்த பஞ்சாயத்திற்கே அந்த கோவில் இனாம் நிலங்களை ஒப்படைக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கோவிலைச் சேர்ந்த இனாம் சொத்தை கோவிலிற்குத்தான் சேர்க்க முடியும். அங்கத்தினர் அவர்கள் எந்தமாதிரி கேஸை வைத்துக்கொண்டு இந்தக் கேள்வியைப் போடுகிறார்கள் என்று தெரியவில்லை. அவர் மனதில் ஏதாவது இருந்தால் அதைப்பற்றி எழுதி அந்த இலாகாவிற்கு அனுப்பினால், அவர்கள் கவனிப்பர்.

SRI M. KALYANASUNDARAM : மருதாசலம் அவர்கள் கேட்ட கேள்வியில் கோவில் இனாம் சாகுபடி நிலத்தைப்பற்றி குறிப்பிடவில்லை. உதாரணமாக, பேரூர் கிராமம் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியும். அந்தக் கிராமம் பூராவும் கோவிலிற்கு சொந்தம். அங்கு பஞ்சாயத்து போர்ட் இருக்கிறது. அங்கு ரோடு போடக்கூட டிரஸ்டிகளின் தயவைப்பெற வேண்டியிருக்கிறது. பொது உபயோகத்திற்கான பகுதிகளை இந்தமாதிரி இனாம் கிராமங்களில் தனிப்பட்டவையாகயிருந்தாலும் சரி அல்லது கோவில் இனாமாயிருந்தாலும் சரி பஞ்சாயத்திற்கு அதிகாரத்தை மாற்ற நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த இனாம்கள் ஒரு பெரிய தலைவலியாக இருக்கிறது. அதை மாற்றியமைக்கச் சட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. அது வருகிறபோது அதில் போதுமான ஷரத்துக்கள் இல்லையென்று சொன்னால் அதைத் திருத்துவதற்கு அங்கத்தினர் அவர்கள் யோசனை சொல்வார்களானால் அதை உடனடியாக கவனிக்க முடியும். இப்பொழுது அவர்கள் உரிமையை சட்டம் இல்லாமல் எடுத்துக் கொள்ளமுடியாது. சட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது. அது இந்த சட்ட சபையில் கூடிய சீக்கிரம் வரப்போகிறது. அதைக் கவனித்து சட்டத்தில் ஏதாவது ஷரத்துக்கள் சேர்க்க வேண்டியிருந்தால் சேர்க்கலாம்.

SRI P. G. MANICKAM : சிவாஜிமா செலுத்திக்கொண்டு ஏழைகள், குறிப்பாக ஹரிஜன மக்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உழைத்து வருகிறார்கள். அந்த நிலங்களை சர்க்கார் நேரடியாக பார்வையிட்டு உடனடியாக அவைகளுக்கு பட்டா கொடுக்க இந்த நிலங்களை பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்காமல் சர்க்காரே பட்டா கொடுக்கும்படி அரசாங்கத்தார் குறிப்பாக ஜில்லா கலெக்டர்களுக்கு உத்தரவு அனுப்புவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதையெல்லாம் எதை மனதில் வைத்துக்கொண்டு சொல்கிறார்களோ, அவரவர்களுக்கு தெரிந்த கேஸ்களை மனதில் வைத்துக்கொண்டு கேள்விகள் போடும்போது உடனடியாக பதில் கொடுப்பது கஷ்டம். பஞ்சாயத்துக்களுக்கு எல்லா அதிகாரமும் கொடுத்திருக்கிறோம். கிராமங்களிலுள்ள எல்லா மக்களின் நன்மைக்காகவும், பொது நன்மை எது என்று பார்த்து அதில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர தனிப்பட்டவர்களுக்கு அதிக சலுகை காட்ட வேண்டுமென்று சொன்னால் பொது நன்மை கெட்டுப்போய் விடுகிறது.

24th August 1961]

பொது நன்மைக்கு பாதகம் இல்லாமல் முக்கியமாக ஏழை மக்களுக்கு, ஹரிஜன மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க முடியுமானுல் கட்டாயம் கொடுத்துத்தான் தீரவேண்டும். அதற்கு சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்து வருகிருர்கள்.

Aid from Private International Organizations

* 1393 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Fellowship travel grants, grants-in-aid provided by private international organizations such as Rock feller Foundation, Nuffield Foundation, etc., during 1959 and 1960 and the number utilized by our State; and

(*b*) the manner in which selections are made?

The Hon. Sri C. SUBRAMANIAM: (*a*) The required information is not available.

(*b*) The fellowships, travel grants, etc., provided by private international organizations are dealt with by the Government of India. As and when an offer for scholarships by foreign non-official organization is received and accepted by the Government of India, it is advertised in all leading English papers of the country. The selections are made on the basis of merit by a duly constituted selection committee, having in view the best utilisation of this foreign aid in conformity with the development plans of the country as a whole. Allocation of foreign aid in this behalf is not made on State-wise basis.

Sri K. SATTANATHA KARAYALAR: ஸார், இது ஸ்டேட் வைஸ் பேஸிஸ் என்ற முறையில் இருக்கவேண்டும் என்று நமது சர்க்கார் மத்திய சர்க்காரைக் கோரியிருக்கிருர்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM: இல்லே, அம்மாதிரி கோருவதும் சரியல்ல என்பது என் கருத்து. இதற்கென்று போகக்கூடிய வர்கள் யாராவது தகுதியுள்ளவர்கள் இருந்தால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளே செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

Sri K. SATTANATHA KARAYALAR: Sir, may I know whether anybody has been selected for any one of the faculties in the past few years?

The Hon. Sri C. SUBRAMANIAM: The information is not available.

Sri K. VINAYAKAM: Sir, at present, the fellowships travel grants are given only for students studying subjects in humanities, technical studies like engineering, etc. May I know, Sir, whether the Government have any proposal under this scheme to send any of the State Legislators to study the legislative proceedings in foreign countries or the working of the democracies, the knowledge gained from which could be profitably utilised when they come back to their respective States?

The Hon. Sri C. SUBRAMANIAM: This is studentship programme. This will not come under the aid programme. If the hon. Member is particular, just for the sake of recreation, about study, it should be taken up in a separate way and not under this scholarship grant.